O.S.74-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.74/2018

வாதி தரப்பு 1வது சாட்சி உண்ணாமலை என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. ஜெயஸ்ரீ, நகல் பிரிவு கண்காணிப்பாளர்/கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. உண்ணாமலை | வயது | : | 77/23 |
| கணவர் பெயர் | : | முத்தையா | தாலுகா | : | காரைக்குடி |
| கிராமம் | : | பள்ளத்தூர் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-27.11.2023

வா.சா.1

**<u>2,3,4,6,7,8,9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. **என்** தகப்பனாருக்கு சொந்த ஊர் லெட்சுமிபுரம். லெட்சுமிபுரம் தற்சமயம் எந்த தாலுகாவில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை.

2. நான் லெட்சுமிபுரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தூரில் பிறந்தேன். பிறந்ததிலிருந்து லெட்சுமிபுரத்தில்தான் வளர்ந்தேன். லெட்சுமிபுரத்தில் 24 வயது வரை வளர்ந்தேன்.

3. என் தகப்பனார் ப்ளைட்டாப்ஸ் என்ற கொசு மருந்து தயாரிக்கும் நிறுவனம் வைத்து நடத்தி வந்தார். அந்த நிறுவனம் சென்னை, மாதாவரத்தில் இருந்தது.

4. என் தகப்பனார் கொசு மருந்து தயாரிக்கும் கம்பெனி ஆரம்பிப்பதற்கு முன்னர் விவசாய வேலை செய்து வந்தார்.

5. எனது தகப்பனார் எப்பொழுது சென்னைக்கு சென்று, கொசு மருந்து தயாரிக்கும் கம்பெனியை ஆரம்பித்தார் என்று எனக்கு தெரியாது.

6. எனது அப்பா சென்னைக்கும், லெட்சுமிபுரத்திற்கும் அடிக்கடி வந்து செல்வார். என் தாயாருடன் நான் லெட்சுமிபுரத்தில் இருந்தேன்.

7. கொசு மருந்து தயாரிக்கும் கம்பெனி ஆரம்பத்தில் வாடகை கட்டிடத்தில் நடத்தினார் என்றால் இல்லை. மாதாவரத்தில் இடம் வாங்கி கட்டிடம் கட்டி தொழிலை நடத்தினார்.

8. கொசு மருந்து தயாரிக்கும் கம்பெனி ஆரம்பத்தில் வாடகை கட்டிடத்தில்தான் இயங்கி வந்தது என்றால் சரியல்ல.

மு.மா.நீ,

9. கொசு மருந்து தயாரிக்கும் கம்பெனி ஆரம்பத்தில் வந்த வருமானத்தை கொண்டுதான் மாதாவரத்தில் இடம் வாங்கி கம்பெனிக்கு கட்டிடம் கட்டி நடத்தி வந்தார் என்றால் இல்லை.

10. எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட இடத்தை விற்றுதான் மாதாவரத்தில் இடம் வாங்கி கம்பெனிக்கு கட்டிடம் கட்டி நடத்தி வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. எங்கள் நகரத்தார் சமூகத்தில் ஒரு பெண்ணிற்கு திருமணம் நடைபெற வேண்டும் என்றால் மற்ற சமுதாயத்தை விட அதிகமான சீர்வரிசைகள் செய்து நடத்த வேண்டும் என்றால் சரிதான். ஆனால் என் தகப்பனார் அந்த நேரத்தில் மிகவும் கஷ்டப்பட்டு வந்தததால் எனது தாய் மாமா என்னை திருமணம் செய்து கொண்டார்.

12. எனது கணவர் என் அம்மாவின் தம்பி. எனது கணவர் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில் வேலை பார்த்தார்.

13. என் திருமணத்தின் போது எனது அப்பா கஷ்டப்பட்டார் என்று சொல்வது உண்மையல்ல என்றாலும், சொத்தில் பாகம் கிடைக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

14. கொசு மருந்து நிறுவனத்தில் எனது அப்பா என்னை Sleeping Partner ஒருபங்குதாரராக வைத்திருந்தார் என்றால் சரிதான்.

15. கொசு மருந்து நிறுவனம் நடத்தி வந்த வருமானத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் எனது அப்பா எனக்கு வைரம், தங்கம் மற்றும் நகைகள் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

16. எனது மற்றொரு இளைய சகோதரி மீனாட்சி 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவர் திருமணமான பின்பு சென்னையில் வசித்து, அவருக்கு கர்நாடக மாநிலம் கூர்க்கில் எஸ்டேட்டுகள் வாங்கி வசதியாக உள்ளார் என்றால் சரிதான். அவருக்கு என் தகப்பனார் சிறந்த முறையில் திருமணம் செய்து வந்தார். என் சகோதரிக்கு கொசு மருந்து நிறுவனத்திலிருந்து வந்த வருமானத்தில் பங்கு கொடுக்கவில்லை. ஆனால் அவருக்கு தனியாக வியாபாரம் ஆரம்பித்து கொடுத்தார்.

17. என் தகப்பனார் இறக்கும்போது அவருக்கு வயது 96.

18. எனது அண்ணன் பெயர் பார்த்தசாரதி. எனது அண்ணன் எனது அப்பா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். எனது அண்ணனுக்கு 6 பெண் பிள்ளைகள். அந்த ஆறு பெண் பிள்கைளில் ஒருவர் பெயர் பத்மாவதி.

அந்த பத்மாவதியைத்தான் எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன். அவர்களது திருமணத்தின்போதும் எனது அப்பா கஷ்டத்தில்தான் இருந்தார்.

19. பத்மாவதிக்கு திருமணமான வருடம் 1996 ஆக இருக்கலாம். அந்த பத்மாவாதி இவ்வழக்கில் 7வது பிரதிவாதி. எனது மகனும், மருமகளும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். பின்பு அவர்களுக்குள் கருத்து வேறுபாடு வந்து பிரிந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

20. பத்மாவதிக்கு சீாவரிசைகளாக கொடுத்த நகைகளை நான்தான் வைத்திருக்கிறேன் என்றால் இல்லை.

21. என் அண்ணன் உயிரோடு இருந்த காலத்தில் நல்ல சம்பாத்தியம் செய்து வந்தார் என்றால் தெரியாது.

22. எனது அண்ணன் மகள்களில் ஒருவர் பெயர் நாச்சாள் என்றால் சரிதான். அந்த நாச்சாள் கோட்டையூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அந்த நாச்சாள் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி.

23. எனது மகனுக்கும், மருமகளுக்கும் விவாகரத்து ஏற்பட்ட பின்னர் நான் அவர்களுடன் தகராறு செய்து கொண்டு சுமூகமான உறவில் இல்லை என்றால் நாங்கள் எந்த தகராறும் செய்யவில்லை.

24. 4,5 நாட்களுக்கு முன்பு கூட காரைக்குடியில் நடந்த திருமணத்திற்கு நாஙகள் அனைவரும் சென்று கலந்து கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டோம் என்றால் சரிதான்.

25. நான் அவர்களுடன் தகராறு செய்ததால், 5ம் பிரதிவாதியை தூண்டிவிட்டு, 5ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.172/2004 என்ற ஒரு வழக்கு, இந்த வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதியை பொறுத்து பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

26. அந்த வழக்கு நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும், அந்த வழக்கு மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

27. அந்த வழக்கு சொத்துக்களில் ஒரு பகுதி இந்த வழக்கிலும் இருப்பதால், இந்த வழக்கு செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

28. நான் திருமணத்திற்கு பிறகு என் கணவர் வீட்டில்தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

29. எனக்கும், எனது தங்கைக்கும் திருமணமான பிறகு, எனது தகப்பனாரை எனது அண்ணன் பார்த்தசாரதியும், அவரது மனைவியும்தான் அவர் இறக்கும் வரை ஆள் வைத்து பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான்.

30. எனது அண்ணனும், எனது தகப்பனாரும் சென்னையில் உள்ள அவர்களது வீட்டில் இறந்தார்கள் என்றால் எனது தகப்பனார் அங்கு இறந்தார். எனது அண்ணன் எங்கு இறந்தார் என்று எனக்கு தெரியாது.

31. என் தகப்பனார் 94 வயது வரைக்கும் ஆரோக்கியமாக இருந்தார். அவர் வேலைகளை அவரே செய்து கொள்வார்.

32. எத்தனை வருடமாக எனது தகப்பனார் கொசு மருந்து கம்பெனியை நடத்தவில்லை என்றால் எனக்கு தெரியாது.

33. கொசு மருந்து கம்பெனியை எனது அண்ணன் இறந்துவிட்டதாலும், எனது தகப்பனாருக்கு நடத்த முடியாமல் அந்த தொழில் நொடித்துவிட்டதாலும், 25 வருடங்களுக்கு முன்பே அந்த கொசு மருந்து கம்பெனியை மூடிவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது.

34. கொசு மருந்து தயாரிக்கும் கம்பெனியில் வந்த வருமானத்தை கொண்டுதான் எனக்கு திருமணம், எனது தங்கையின் திருமணம், எனது அண்ணன் மகள் திருமணம், எனது தங்கைக்கு தொழில் ஆரம்பித்து கொடுத்தது அனைத்தும் என்றால் எனக்கு தெரியாது.

35. என் தங்கையை என்னுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்ய நான் கூப்பிடவில்லை.

36. இந்த கொசு மருந்து தயாரிக்கும் நிறவனத்தை தவிர என் தகப்பனார் வேறு தொழில் எதுவும் செய்து வந்தாரா என்று எனக்கு தெரியாது.

37. கொசு மருந்து நிறுவனத்தின் மூலம் இந்தியா முழுவதும் அரசாங்க மூலமாக விற்பனை செய்து வந்தார் என்றாலும், பின்பு அந்த நிறுவனம் நொடித்துவிட்டது என்றாலும் சரியல்ல.

38. அவ்வாறு இந்த நிறுவனம் நொடித்த பிறகு அந்தசொத்துக்களை விற்று அதிலிருந்து வந்த தொகையை எனது தகப்பனார் அவரது கை செலவிற்காக வைத்துக்கொண்டார் என்றால் இல்லை.

39. லெட்சுமிபுரத்தில் உள்ள வீடு எனது தகப்பனார் பராமரித்து வந்த சொத்து என்றால் சரிதான்.

40. அந்த வீடு என் தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அது எனது தாத்தாவின் சொத்து.

41. தாவா 2வது அயிட்ட சொத்து என் தகப்பனார் கொசு மருந்து நிறுவனத்தின் மூலமாக வந்த வருமானத்தை கொண்டு வாங்கிய சொத்து என்றால் இல்லை.

42. சென்னை, மின்ட்டில், வெங்கட்ராமய்யர் தெருவில் உள்ள சொத்து எனது அப்பாவிற்கும், எனது பெரியப்பாவிற்கும் பாத்தியப்பட்டது.

43. 03.06.2015-லேயே எனது தகப்பனாரை அவரது மருமகள்தான் பார்த்துக்கொண்டார் என்பதால், பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரம் மூலமாக அவரது மருமகளுக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

44. சென்னை, மின்ட்டில் உள்ள சொத்தில் பாதி பாகத்தை அவரது பேத்திக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றால் இல்லை.

45. அவரது பேத்தி அபிராமி பின்பு அவரது தாயாருக்கே அந்த சொத்தை எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

46. நாங்கள் திருமணத்திற்கு பிறகு எனது அப்பாவிடமிருந்து சீர் வரிசைகள் வாங்கி சென்ற பிறகு, எனது அப்பாவை நாங்கள் கவனிக்கவில்லை என்பதால், எனது அப்பா அவரது சொத்துக்களை எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது சகோதரி பாக வழக்கு போடச்சொல்லியும் அவர் வரவில்லை என்றால் சரியல்ல.

47. இந்த சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பாவிற்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவை அனைத்தையும் என் தகப்பனார் எழுதி கொடுத்துவிட்டார் என்பதால், எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

48. தற்போது வரை சென்னையில் உள்ள சொத்துக்கள் இந்த பிரதிவாதிகளின் பராமரிப்பில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

49. அதனால் நான் கோரியவாறு பாகப்பிரிவினை கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.